## நம்மாழ்வார் அருளிச் செய்த
## திருவாய்மொழி
## நான்காம் பத்து

### நாலாம் திருவாய்மொழி - மண்ணை
### கலந்த எம்பெருமான் மறைய நிற்க, பிறிவாற்றாத நிலையில் போலிகண்டு மேல்விழுந்து வருந்தும் தலைவியின் நிலையைத் தாய் உரைக்கும் பாசுரம்

** மண்ணை இருந்து துழாவி *
வாமனன் மண் இது என்னும் *
விண்ணைத் தொழுது அவன் மேவு *
வைகுந்தம் என்று கை காட்டும் **
கண்ணை உண்ணீர் மல்க நின்று *
கடல் வண்ணன் என்னும் அன்னே! * என்
பெண்ணைப் பெரு மயல் செய்தாற்கு *
என் செய்கேன்? பெய் வளையீரே! 1

பெய் வளைக் கைகளைக் கூப்பிப் *
பிரான் கிடக்கும் கடல் என்னும் *
செய்யதோர் ஞாயிற்றைக் காட்டிச் *
சிரீதரன் மூர்த்தி ஈதென்னும் **
நையும் கண்ணீர் மல்க நின்று *
நாரணன் என்னும் அன்னே! * என்
தெய்வ உருவில் சிறு மான் *
செய்கின்றது ஒன்று அறியேனே 2

அறியும் செந்தீயைத் தழுவி *
அச்சுதன் என்னும் மெய் வேவாள் *
எறியும் தண் காற்றைத் தழுவி *
என்னுடைக் கோவிந்தன் என்னும் **
வெறி கொள் துழாய் மலர் நாறும் *
வினை உடையாட்டியேன் பெற்ற *
செறி வளை முன் கைச் சிறு மான் *
செய்கின்றது என் கண்ணுக்கு ஒன்றே 3

ஒன்றிய திங்களைக் காட்டி *
ஒளி மணி வண்ணனே! என்னும் *
நின்ற குன்றத்தினை நோக்கி *
நெடுமாலே! வா என்று கூவும் **
நன்று பெய்யும் மழை காணில் *
நாரணன் வந்தான் என்று ஆலும் *
என்று இன மையல்கள் செய்தார் *
என்னுடைக் கோமளத்தையே 4

கோமள வான் கன்றைப் புல்கிக் *
கோவிந்தன் மேய்த்தன என்னும் *
போம் இள நாகத்தின் பின் போய் *
அவன் கிடக்கை ஈதென்னும் **
ஆம் அளவு ஒன்றும் அறியேன் *
அரு வினையாட்டியேன் பெற்ற *
கோமளவல்லியை மாயோன் *
மால் செய்து செய்கின்ற கூத்தே 5

கூத்தர் குடம் எடுத்து ஆடில் *
கோவிந்தனாம் எனா ஓடும் *
வாய்த்த குழல் ஓசை கேட்கில் *
மாயவன் என்று மையாக்கும் **
ஆய்ச்சியர் வெண்ணெய்கள் காணில் *
அவன் உண்ட வெண்ணெய் ஈதென்னும் *
பேய்ச்சி முலை சுவைத்தாற்கு * என்
பெண் கொடி ஏறிய பித்தே! 6

ஏறிய பித்தினோடு * எல்லா
உலகு கண்ணன் படைப்பு என்னும் *
நீறு செவ்வே இடக் காணில் *
நெடுமால் அடியார் என்று ஓடும் **
நாறு துழாய் மலர் காணில் *
நாரணன் கண்ணி ஈதென்னும் *
தேறியும் தேறாதும் மாயோன் *
திறத்தனளே இத்திருவே 7

திரு உடை மன்னரைக் காணில் *
திருமாலைக் கன்டேனே என்னும் *
உரு உடை வண்ணங்கள் காணில் *
உலகளந்தான் என்று துள்ளும் **
கரு உடைத் தேவில்கள் எல்லாம் *
கடல் வண்ணன் கோயிலே என்னும் *
வெருவிலும் வீழ்விலும் ஓவாக் *
கண்ணன் கழல்கள் விரும்புமே 8

விரும்பிப் பகவரைக் காணில் *
வியல் இடம் உண்டானே! என்னும் *
கரும் பெரு மேகங்கள் காணில் *
கண்ணன் என்று ஏறப் பறக்கும் **
பெரும் புல ஆநிரை காணில் *
பிரான் உளன் என்று பின் செல்லும் *
அரும் பெறல் பெண்ணினை மாயோன் *
அலற்றி அயர்ப்பிக்கின்றானே 9

அயர்க்கும் சுற்றும் பற்றி நோக்கும் *
அகலவே நீணோக்குக் கொள்ளும் *
வியர்க்கும் மழைக் கண் துளும்ப *
வெவ்வுயிர்க் கொள்ளும் மெய் சோரும் **
பெயர்த்தும் கண்ணா! என்று பேசும் *
பெருமானே! வா என்று கூவும் *
மயல் பெருங்காதல் என் பேதைக்கு *
என் செய்கேன்? வல்வினையேனே 10

** வல்வினை தீர்க்கும் கண்ணனை *
வண் குருகூர்ச் சடகோபன் *
சொல் வினையால் சொன்ன பாடல் *
ஆயிரத்துள் இவை பத்தும் **
நல் வினை என்று கற்பார்கள் *
நலனிடை வைகுந்தம் நண்ணி *
தொல் வினை தீர எல்லாரும் *
தொழுதெழ வீற்றிருப்பாரே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---